தி




அமெரிக்கா

பிறமாநில தமிழர் செய்திகள்

செய்திகள் செய்தி தொகுப்பு

## அட்லாண்டாவில் தமிழ் மைய ஆண்டு விழா

ஏப்ரல் 12,2013 IST

Comments



அட்லாண்டா : அட்லாண்டாவின் மிகப் பழமையான லக்குமி தமிழ் பயிலும் மையத்தின் வெள்ளி விழா மார்ச் 30ம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீநிதியில் இறை வணக்கத்துடனும், கீதா வைத்தீஸ்வரனின் வரவேற்புரையுடனும் தொடங்கிய விழாவில் 25 வருடங்களுக்கு முன் இந்த பள்ளியை நிறுவிய லட்சுமி சங்கரை கவுரவிப்பதற்காக ரகசிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். பள்ளியின் துணை தலைவர் ராஜி ராமச்சந்திரன், யாரும் எதிர்பாராத வகையில் அங்கு வருகை தந்த லக்ஷ்மியின் கணவர் சங்கர், பள்ளியின் தொடக்க கால நிகழ்வுகளை அனைவருடனும் பகிர்ந்து கொண்டார். இந்த ஆச்சரியங்களால் திக்கு முக்காடிப் போன லக்ஷ்மி சங்கர்,வீட்டில் பேசப்படும் தமிழ் மொழி தான் தமிழ் கல்விக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் அஸ்திவாரம் என்பதை அறிவுறுத்திப் பேசினார். அதனைத் தொடர்ந்து களை கட்டத் தொடங்கிய குழந்தைகளின் கலை நிகழ்ச்சியில், காட்சிக்கினிய பரதநாட்டியமும், செவிக்கினிய தேவாரம், திருக்குற்றாலக் குறவஞ்சி மற்றும் பாரதியார் பாடல்களும், சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் துணுக்குகளும் இடம்பெற்றது. அதுமட்டுமின்றி, கல்விச் செல்வம், இன்று ஒரு தகவல் மற்றும் ஒபாமா தமிழ் நாட்டுக்கு வந்தால் போன்ற தலைப்புகளில் அருமையான மேடைப் பேச்சுக்களையும் கேட்க முடிந்தது. சுஜாதா நாதனின் முதலாம் வகுப்பு மாணவர்கள், தோப்புக்கரணம், மரம் என்ற நண்பன் போன்ற நாடகங்களைத் தன் மழலை மொழியில் நடித்துக் காட்டியது ரசிக்கும்படி இருந்தது. இறுதியாகப், பெற்றோர்கள் பங்கேற்ற வார்த்தை விளையாட்டு போட்டியை சுவாரஸ்யமாக நடத்தினர், ஹேமா மோகனும், சித்ரா வைத்தீஸ்வரனும். மார்ச் 16ம் தேதி நடந்த பேச்சுப்போட்டி, வாசிப்பு மற்றும் உச்சரிப்பு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றியுருக்களும், தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கிருஷ்ணாவும் விஷாலும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, திவ்யாவின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

***- தினமலர் வாசகி ஜெயா மாறன்***

Like 5 Send Tweet 0 0 SHARE

## மேலும் அமெரிக்கா செய்திகள்

பிட்ஸ்பர்க்கில் தமிழ்ப் புத்தாண்டு விழா